**செய்தி வெளியீடு எண்: 233** **நாள்: 06.04.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை 5.4.2018 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் சந்தித்து, 2018–ஆம் ஆண்டிற்கான தேசிய கல்வி நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பின் பட்டியலில், அண்ணா பல்கலைக்கழகம் ஒட்டுமொத்தப் பிரிவில் 10வது இடத்தையும், பல்கலைக்கழகங்களின் பிரிவில் 4வது இடத்தையும், பொறியியல் பிரிவில் 8வது இடத்தையும் பெற்றதற்காக, புதுடில்லியில் 3.4.2018 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.பிரகாஷ் ஜவடேகர் அவர்களால் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

2018–ஆம் ஆண்டிற்கான தேசிய கல்வி நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பில் ஒட்டுமொத்த பிரிவில் அண்ணா பல்கலைக்கழகம் அகில இந்திய அளவில் 10வது இடத்தை பெற்றுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் உள்ள 8 அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள், 2 மத்திய அரசு கல்வி நிறுவனங்கள், 2 அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் 9 தனியார் பல்கலைக்கழகங்கள் / கல்வி நிறுவனங்கள், என மொத்தம் 22 கல்வி நிறுவனங்கள் அகில இந்திய அளவில் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ளன.

பல்கலைக்கழகங்களுக்கான பிரிவில் அண்ணா பல்கலைக்கழகம் 4வது இடத்தினை பெற்றுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் உள்ள 9 அரசு பல்கலைக்கழகங்கள், 1 மத்திய அரசு கல்வி நிறுவனம் மற்றும் 10 தனியார் பல்கலைக்கழகங்கள், என மொத்தம் 21 பல்கலைக்கழகங்கள் அகில இந்திய அளவில் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ன.

பொறியியல் பிரிவில் அண்ணா பல்கலைக்கழகம் 8–வது இடத்தினை பெற்றுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூர்–அரசு தொழில்நுட்ப கல்லூரி, 2 மத்திய அரசு கல்வி நிறுவனங்கள், 15 அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள், என மொத்தம் 19 பொறியியல் கல்லூரிகள் அகில இந்திய அளவில் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ளன.

கல்லூரிகளுக்கான பிரிவில் தமிழ்நாட்டில் உள்ள 5 அரசு கல்லூரிகள், 33 அரசு உதவிபெறும் மற்றும் தனியார் கல்லூரிகள், என மொத்தம் 38 கல்லூரிகள் அகில இந்திய அளவில் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ளன.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உயர்கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. சுனீல் பாலீவால்,இ.ஆ.ப.,, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் எஸ்.கணேசன், அண்ணா பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் குழு உறுப்பினர் முனைவர் டி.வி.கீதா , திட்டம் மற்றும் வளர்ச்சி மைய இயக்குநர் முனைவர் ஜெ.குமார், தொழில் மைய கூட்டமைப்பு இயக்குநர் முனைவர் தியாகராஜன் மற்றும் தேசிய கல்வி நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் பிரகாஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 6.4.2018**